**THE LABOUR COURT, SALEM**
**C.P.No.46 of 2018**

**20.07.2023**

**RW1 – சுந்தரமூர்த்தி மீண்டும் வரவழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

மனுதாரர் 30.06.2015 ல் பணிஓய்வு பெற்றார். ஜுலை 2015 முதல் மனுதாரர் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர் என்றால் சரிதான். ஓய்வூதிய நம்பக விதி பிரிவு 20(A)ன்படி அரசு அறிவிப்பு செய்யும் அரசாங்க ஊழியருக்கான அகவிலைப்படி சதவீதத்தை போக்குவரத்து தொழிலாளர்களுக்கு நடைமுறைபடுத்தவேண்டும் என உள்ளது என்றால் சரிதான். பென்சன் ட்ரஸ்ட் சொல்லக்கூடிய அகவிலைப்படியைத்தான் ஊழியர்கள் தரவேண்டும் என்று மேற்படி பிரிவு 20(A)ல் இல்லை. பணிக்கொடை கட்டுப்பாட்டு அதிகாரி மனுதாரருக்கு நிர்ணயம் செய்த அடிப்படை சம்பளம் மற்றும் தரஊதியத்தின் அடிப்படையில் மனுதாரருக்கு பணிக்கொடை தொகை வழங்காகிவிட்டது. மேற்படி பணிக்கொடை அலுவலர் தீர்மாணிக்கப்பட்ட அடிப்படை சம்பளம் மற்றும் தரஊதியத்தின் அடிப்படையில்தான் ஓய்வூதியம் வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

மாத சம்பளத்திற்கு ஒரு கணக்கீடும், பணிக்கொடை கொடுப்பதற்கான மாத சம்பளத்திற்கு வேறு ஒரு கணக்கீடும் ஓய்வூதியம் கொடுப்பதற்கான கணக்கீட்டில் வேறு ஒரு மாத சம்பளமும் எடுத்துக்கொள்ள இயலுமா என்றால், சரியல்ல. அவ்வாறு ஏதேனும் எழுத்துமூல உத்தரவோ, அரசு ஆணையோ நீதிமன்றத்தில் உள்ளதா என்றால், அவ்வாறு எதுவும் இல்லை. அகவிலைப்படியை பொறுத்தவரை 119 சதவீததிலிருந்து உயத்தப்பட்ட அகவிலைப்படியை

நடைமுறைப்படுத்தவேணடும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை எண்.1147/2020 என்ற வழக்கு தீர்ப்பு நாளான 02.03.2023ல் உத்தரவாகியதை நான் நடைமுறைப்படுத்தவேண்டும் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. மனுவில் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கப்பட்டது என்றால் சரியல்ல. பணிக்கொடை வழக்கில் நிர்வாகம் ஒப்புக்கொண்ட அடிப்படை சம்பளம் மற்றும் தரஊதியத்தை இந்த கணக்கீட்டு முறையில் நடைமுறைப்படுத்த்வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Sd/ (Dr.P. Murugan),
Presiding Officer,
Labour Court, Salem.